மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய உரைகளிலிருந்து

தொகுக்கப்பட்ட **பொன்மொழிகள்**

மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி **K. பழனிசாமி** அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய உரைகளிலிருந்து

தொகுக்கப்பட்ட **பொன்மொழிகள்**

சிறப்பு வெளியீடு எண். 26

தமிழரசு

பிப்ரவரி 2019

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

பொன்மொழிகள்

வளமிக்க தமிழ்நாடு

❖ தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு வளம் பெறவும், அவர்தம் நலனைப் பேணிப் பாதுகாக்கவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நலத்திட்டங்களை மக்கள் அனைவரும் முறையாக பயன்படுத்தி வளமிக்க தமிழ்நாட்டை படைத்திட ஒன்றுபட்டு உழைத்திட வேண்டும்.

காவல்துறை

❖ நமது காவல் துறை எல்லா காலங்களிலும் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதிலும், குறிப்பாக, நெருக்கடியான தருணங்களில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், பொது ஒழுங்கை சிறப்பாக பேணிப்பாதுகாக்கும் துறையாக விளங்கி வருகிறது.

சாதனைகளின் களம்

❖ சென்னை ஓர் சிறந்த உயர்கல்வி மையம் மட்டுமல்ல. இந்தியாவின் முக்கிய தொழில் மையங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

❖ தமிழ்நாட்டின் தலைநகரமாக இருப்பதால் பல தலைவர்களையும், அறிஞர்களையும், கலைஞர்களையும், பல அரசியல் நிகழ்வுகளையும் கண்டது சென்னை. பலருடைய சாதனைகளின் களமாக இருப்பதும் சென்னையாகும்.

சட்டத்தின் ஆட்சி

❖ தமிழகத்தைப் பொருத்தவரையில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்து கொண்டிருக்கிறது. சட்டத்தின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஜனநாயக கட்சி

❖ கட்சியின் அடிமட்டத் தொண்டனுக்கும் தலைவர் பதவி வழங்கும் ஜனநாயகக் கட்சி ஒன்று உண்டு என்றால், அது அ.இ.அ.தி.மு.க மட்டும்தான். அதற்கு உதாரணமாகத்தான், ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்த நான் இன்று உங்கள் கண்முன்னே முதலமைச்சராக நிற்கின்றேன்.

அணையா அடுப்பு

❖ ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கென்றே, வடலூர் வள்ளலார் அவர்கள் அணையா அடுப்பினை ஏற்றிவைத்தார். அதற்கு பிறகு ஒரு அணையா அடுப்பு எறிந்தது என்றால், அது ஏழை, எளிய மக்களுக்காகவும் தொண்டர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட ராமாவரம் தோட்ட அணையா அடுப்புதான்.

செல்வம்–கல்வி

❖ செல்வம் இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுங்கள், கல்வி அறிவு உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு அறிவு புகட்டுங்கள்.

கதர் ஆடை

❖ கிராமப்புற ஏழை, எளிய நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கதர் ஆடைகள் மற்றும் கைவினைப் பொருட்களை பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், இளைஞர்கள், அரசு ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் அனைவரும் வாங்கி பயன்படுத்த வேண்டும்.

அமைதி

- ஒரு மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் அங்கு அமைதி நிலவ வேண்டும். தனிமனித அமைதி குடும்ப அமைதியாக மாறும், குடும்ப அமைதி, மாநில அமைதியாக மாறும், மாநில அமைதி, நாட்டு அமைதியாக மாறும், ஒரு நாட்டின் அமைதி உலக அமைதியாக மாறும்.

சாதனை

- சாதிக்க நினைப்பவர்கள் எந்த தடைகள் வந்தாலும் அதனை உடைத்தெறிந்து தமது பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பார்கள்.

அம்மா அரசு

- இதயதெய்வம் புரட்சித்தலைவி மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து தமிழகம், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்குவதற்க இரவு, பகல்பாராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

உடல் மாற்று அறுவை சிகிச்சை

- இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாக செயல்படுவதில் இந்திய நாட்டிலேயே முதன்மை மாநிலத்திற்கான மத்திய அரசின் விருதுகளை தமிழ்நாடு தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பெற்று மகத்தான சாதனை படைத்துள்ளது.

ஆளுமையில் சிறந்த மாநிலம்

❖ பெங்களூருவைச் சேர்ந்த “பொது விவகாரங்கள் மையம்” என்ற அழைப்பு சமூக பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் தமிழ்நாடு ஆளுமையில் 2018ஆம் ஆண்டிற்கான இரண்டாவது சிறந்த மாநிலமாக திகழ்கிறது என்று அறிவிக்கப்பட்டது.

திட்டப்பணிகளில் விறுவிறுப்பு

❖ மாண்புமிகு அம்மாவின் அரசு மீது, அரசியல் ரீதியான குற்றச்சாட்டு தான் எழுகிறதே தவிர திட்டப்பணிகள் விறுவிறுவென்று நடந்து வருகிறது. மக்களுக்காக வகுக்கப்படும் திட்டங்களை சரிவர நடைமுறைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள்.

இறப்பு விகிதம் குறைப்பு

❖ தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வெகு சிறப்பான செயல்பாட்டின் மூலம் தாய்மார்கள் மற்றும் சிசு இறப்பு விகிதம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

108 இன் சேவை

❖ விபத்து நேரிடும் பகுதிகளுக்கு 108 அவசரகால ஊர்தி சென்றடையும் நேரம் 11 நிமிடத்திலிருந்து 8.32 நிமிடமாக குறைக்கப்பட்டுள்ளது. இது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையானதாகும்.

மின்நிலையங்கள்

❖ ஒவ்வொரு பகுதிக்கும் மின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரியான மின் அழுத்தத்துடன் மக்களுக்கு சீரான மின்சாரம் வழங்கிட கூடுதல் மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும்.

ஒரே ஆண்டில் 3 மாநில விருதுகள்

❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்காக தமிழ்நாட்டில் தேசிய அளவில் 3 மாநில விருதுகள் ஒரே ஆண்டில் வழங்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

காவல் துறையின் சிறப்பான பணி

❖ மாநிலத்தின் அமைதியைப் பேணிக்காப்பது சட்டம் ஒழுங்கை பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது. குற்றவாளிகளை கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக்கொடுப்பது போன்ற பல்வேறு முக்கியப் பணிகளை காவல்துறை ஆற்றி வருகிறது.

மாற்றுத்திறனாளி நலன்

❖ எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறையில் பணிபுரியும் மொத்த பணியார்களில் 12 விழுக்காடு பணியாளர்கள் மாற்றுத் திறனாளிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கச்சத்தீவு

❖ கச்சத்தீவு தொடர்பாக 1974 இல் இந்திய–இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக 2008 இல் எங்கள் மதிப்பிற்குரிய தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடரப்பட்ட வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதை அறிவீர்கள். தமிழக மீனவர்களின் மீன்பிடி விவகாரத்தை சர்வதேச கடல் தாண்டுதல் தொடர்பான பிரச்சினையாகக் கருத வேண்டாம். இந்த விவகாரத்தில் தாங்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு, பாரம்பரிய மீன்பிடிப்பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான பாதுகாப்பை இலங்கை அரசுடன் பேசி உறுதி செய்ய வேண்டும்.

கோரிக்கைகளை நிறைவேற்றும் அரசு

❖ நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள், பொதுமக்கள் வைக்கின்ற கோரிக்கையையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். எவ்வளவோ பொய்களை அள்ளி விசினாலும், பொய்மூட்டைகளை அவிழ்த்துவிட்டாலும் ஒரு தொண்டனைக்கூட நீங்கள் தொட்டுப்பார்க்க முடியாது.

குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி

❖ ஏழை, எளிய சமூகத்திலே பொருளாதாரத்தில் பின்தங்கிய வசதியில்லாத குடும்ப மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி கற்பதற்கு சிறந்த வசதியை அம்மா அரசு ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

சத்துணவில் முட்டை

❖ ஏழை எளிய மக்களை காக்கக்கூடிய அரசு அந்த ஏழை எளிய மக்கள் பெற்றெடுத்த குழந்தைகளுக்கு முட்டை வழங்குவதை ஒருபோதும் நிறுத்திவிடமாட்டோம். எவ்வளவு பிரச்சினை வந்தாலும் அதற்கு இடம் கொடுக்காமல் அந்தக் குழந்தைகளுக்கு முட்டைகள் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

ஐக்கிய நாடு சபை

❖ ஐக்கிய நாடுகள் சபையில் பொறிக்கப்பட்டிருக்கும் ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’ என்ற உலகளாவிய தத்துவ மொழிக்குச் சொந்தக்காரராக விளங்கும் கணியன் பூங்குன்றனார் இங்குள்ள மகிபாலன்பட்டியில் பிறந்தவர் என்பது சிவகங்கை மாவட்டத்திற்கு சூட்டப்பட்ட புகழ் மகுடம் அல்லவா ?

விசுவாசம் உண்மை நேர்மை

❖ நான் 1974 இல் இந்த இயக்கத்தில் இணைந்தேன். கிட்டத்தட்ட 43 ஆண்டுகாலம் சிந்தாமல், சிதறாமல், எந்தவித சறுக்கலுக்கும் ஆளாகாமல் நிலைத்து நின்று பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சிகாலத்திலேயிருந்து, இன்றுவரை கழகத்திற்கு விசுவாசமாகவும், உண்மையாகவும், நேர்மையாகவும் பாடுபட்டுக்கொண்டிருக்கிற காரணத்தினாலே உங்களால் இந்த உயர்ந்த பதவி எனக்கு கிடைத்திருக்கிறது.

நம்பவேண்டாம்

❖ சிலர் மக்களுக்காக தொண்டு செய்வதாகவும், அவர்கள் நலன்களுக்காகவே தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்வதாகவும் கூறுவதை நம்பாதீர்கள். உண்மையில் அப்படிப்பட்டவர்கள் அப்பாவி பாமர மக்களை வஞ்சித்து அவர்களைச் சுரண்டு சுகபோக வாழ்வு வாழ்பவர்கள்.

தலைவர்கள் அல்ல தொண்டர்கள்

❖ எங்களை, நாங்கள் தலைவர்களாக ஒரு காலமும் நினைத்துக்கொண்டதில்லை. தொண்டர்களாகவே நினைத்துத்தான் அல்லும் பகலும் மக்கள் பணியாற்றி வருகிறோம்.

நலன் பயக்கும் திட்டங்கள்

❖ அனைத்துத் துறைகளும் முடுக்கிவிடப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் தலைமையில் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு குழுவாகச் சென்று மக்கள் அறிவார்கள். குறை கூறுபவர்கள்—குறை கூறிக்கொண்டுதான் இருப்பார்கள்.

இலட்சியத்தை நிறைவேற்றுவோம்

❖ எதிர்க்கட்சிகளால் ஏற்படும் தடைகளையெல்லாம் தகர்த்து எறிந்துவிட்டு, எப்போதும், நாட்டுக்கு நலம் பயக்கும் திட்டங்களை தீட்டுவதிலும், அவற்றை விரைந்து செயல்படுத்துவதிலும்தான் அதிக கவனம் செலுத்தி வருகிறோம். எவ்வளவு இன்னல்கள், தடைகள் ஏற்படினும், நாங்கள் இணைந்து செயல்பட்டு இருபெரும் தலைவர்களுடைய இலட்சியத்தை நிறைவேற்றுவதே எங்கள் தலையாய பணி என்று சூளுரைத்து எங்கள் உழைப்பை உங்களுக்குத் தொய்வின்றித் தொடர்வோம்.

நாட்டின் முன்னேற்றம்–பெண்கள்

❖ ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், அந்த நாட்டில் உள்ள பெண்கள் தன்னிறைவோடு, மகிழ்ச்சியுடனும், வாழ வேண்டும். பெண்கள் நிம்மதியாக இருந்தால்தான் ஒவ்வொரு குடும்பமும் நன்றாக இருக்கும். ஒவ்வொரு குடும்பமும் நன்றாக இருக்கும். ஒவ்வொரு குடும்பமும் நன்றாக இருந்தால், ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு நாடும் நன்றாக இருக்கும்.

தோல்வி இல்லை

❖ நாங்கள் இந்த மக்களுக்கு நல்லவற்றை மட்டுமே செய்து வந்திருக்கிறோம். எங்களை மட்டுமே மக்கள் மனதில் நிறுத்தியிருக்கிறார்கள். மக்களுக்காக இன்னும் பல நூறாண்டுகள் இந்த இயக்கம் பாடுபடும். எங்களுக்கு எப்போதும் தோல்விடயே கிடையாது.

இரத்தம்

❖ உடலிலே ஓடுகின்ற இரத்தம் விசுவாசமுள்ள இரத்தமாக இருக்கின்ற காரணத்தினாலே, ஒரு தொண்டனைக்கூட, நீங்கள் எங்கள் இயக்கத்திலிருந்து அசைத்துப்பார்க்கக் கூட முயாது ஆகவே, விசுவாசமுள்ள தொண்டர்களும், பொதுமக்களும் இருக்கின்றவரை இந்த இயக்கத்தை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது என்பதை திட்டவட்டமாக இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவரின் பாடல்

❖ "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதுபோல் எப்போதும் மக்கள் பணி ஆற்றுங்கள். "காட்டில் நிலவாய் கடலில் மழையாய் பிறந்தால் யாருக்கு இலாபம், பகையில் துணையாய் பசியில் உணவாய் இருந்தால் ஊருக்கு இலாபம் என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் பாடல் வரிகளை மனதில் ஏற்றுங்கள்.

ஒற்றுமையின் அவசியம்

❖ நமக்குள் பிளவை உண்டாக்கும் மாற்று சக்திக்கு ஒரு காலமும் இடம் கொடுக்காத அளவிற்கு நாம் ஒற்றுமையாக மக்கள் பணி ஆற்ற வேண்டும்.

உயர்கல்வி சேர்க்கையில் முதன்மை

❖ மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை சொல்கிறது. நாட்டிலேயே உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு 46.9 சதவீதம் என்ற அளவுடன் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இது தேசிய சராசரியான 25.2 சதவீதத்தை விட இரண்டு மடங்கு கூடுதலாகும்.

வாழ்வளிக்கும் மனித உறுப்புகள்

❖ ஒரு விபத்து மனித வாழ்க்கையை புரட்டிப்போட்டு விடுகிறது. விபத்தால் பாதிக்கப்பட்ட மனிதனின் உறுப்புகள் இன்னொரு மனிதனுக்கும் வாழ்வளிக்கிறது.

குடிநீர்–தேசிய விருது

❖ வரலாறு காணாத வறட்சியிலும், குடிநீர் பிரச்சினை, தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்ற நிலையை மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதி செய்தது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் சிறந்த செயல்பாட்டிற்கான தேசிய விருது பேரூராட்சிகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலா

❖ சுற்றுலாவுக்கு உகந்த இடமாக தமிழ்நாடு உள்ளது என்பதற்குச் சான்றாக கடந்த மூன்று ஆண்டுகளாக உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலா பயணிகள் வருகையில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது.

அமைதிப்பூங்கா

❖ மாநிலத்தில் சாதி, சமய வெறியர்கள் மற்றும் சமூக விரோதிகள் மீது அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி, மாநிலம் ஒரு அமைதிப் பூங்காவாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஜனநாயக மரபு

- ❖ மாநில அரசு கோரிய நிதியை முழுமையாக அளிக்காவிட்டாலும் அவர்கள் அளித்த நிதிக்கு நன்றி சொல்வதைக்கூட, கொச்சைப்படுத்துவது என்பது நாகரிகமான ஜனநாயக மரபாகும். இவ்வாறு நன்றி சொல்வதைக்கூட, கொச்சைப்படுத்துவது என்பது நாகரிகமான ஜனநாயகம் அல்ல.

சிந்தாமல் சிதறமால்

- ❖ மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களை செம்மையாகத் தொடங்குவதிலும், இந்த அரசு எந்தவித விளம்பரமோ, ஆர்ப்பாட்டமோ இல்லாமல் முனைப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் சிந்தாமல் சிதறாமல் எங்கள் திட்டங்கள் முழுமையாகச் சேர வேண்டும் என்பதில் நாங்கள் விழிப்பாக இருக்கின்றோம்.

சொல்வாக்கு செல்வாக்கு

- ❖ “எங்கள் சொல்வாக்கு சுத்தமாக இருக்கிறது”– அதனால் எங்களுக்கு செல்வாக்கு பெருகி இருக்கிறது. எனவேதான் மக்கள் தங்கள் நல்வாக்குகளை எங்களுக்கு அளிக்கிறார்கள்.

உணர்வு–அழகு

- ❖ நம் உயிருக்கு மேலான தமிழை தேன்தமிழே! செந்தமிழே! நற்றமிழே! முத்தமிழே! காப்பியத்தமிழே! பூந்தமிழே! கன்னித்தமிழே!“ என்று அழைப்பதை விட தமிழே தாய்த் தமிழே என்று அழைப்பதில்தான் உணர்வு இருக்கிறது, அழகு இருக்கிறது.

வேதனை

❖ வெளிநாட்டினரும் தமிழ் அறியா பிற மாநிலத்தவர் மற்றும் பிற நாட்டினர் தமிழ் பேசுகிறார்கள், தமிழ் எழுதுகிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலேயே பிறந்து, தமிழ்நாட்டிலேயே வாழும் சிலர் பிறமொழி மோகத்தில் தமிழை தவிர்ப்பது, வேதனை அளிக்கிறது.

கணினிக்குள் புகுந்த மொழி

❖ இந்தியாவிலேயே முதன்முதலில் அச்சுக்காக வந்தமொழி தமிழ் என்பதைப் போலவே, முதன்முதலில் கணினிக்குள் புகுந்த மொழியும் தமிழ்தான். இன்று இணையதளம் தமிழ் இலக்கியங்களை உலகம் முழுவதும் கொண்டு சேர்க்கிறது.

தமிழ்தாயின் செங்கோல்

❖ வழி காட்டும் ஒளி விளக்காய், ஒளியூட்டும் பெருவிளக்காய், பிணி நீக்கும் அரு மருந்தாய், உணர்வூட்டும் உயர்மருந்தாய் – உலகத்தில் இணையற்று திகழ்வதுதான் திருக்குறள். தமிழ்தாய்க்கு அணிகலன்களாக சிலப்பதிகாரமும், சிந்தாமணியும், குண்டலகேசியும், வளையாபதியும் இன்னும் பல காப்பியங்களும் நீதி நூல்களும் அழகு சேர்த்தாலும், தன் கையில் திருக்குறளை செங்கோலாக வைத்துக் கொண்டுதான் தமிழ்த்தாய் உலகையே ஆட்சி செய்கிறாள்.

நூலைப் புகழ்ந்து ஒரு நூல்

❖ எல்லோருக்கும், பொதுவான ஒரு வாழ்வியல் நூல் திருக்குறள் மட்டும் தான். இந்த பெருமை வேறு எந்த நூலுக்கும், எந்த நாட்டிலும் கிடையாது. திருக்குறளுக்கு 226 பேர் உரை எழுதியுள்ளார்கள். ஒரு நூலை புகழ்ந்து பேச திருவள்ளுவமாலை என்னும் இன்னொரு நூல் எழுதப் பெற்றது திருக்குறளுக்கு மட்டும்தான்.

வாழும் கலை – ஆளும் கலை

❖ ஒரு தனிமனிதன் எப்படி வாழவேண்டும்? ஒரு இல்லறம் எப்படி நடக்கவேண்டும்? ஒரு சமுதாயம் எப்படி இயங்க வேண்டும்? ஒரு மன்னன் எப்படி ஆட்சி செய்ய வேண்டும்? ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும்? என்று அத்தனை வழிமுறைகளும் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது வாழும் கலை முதல், ஆளும் கலைவரை கற்றுத் தரும் ஒரே நூல் திருக்குறள்.

ஏமாற்றுவது தெரியும்

❖ ஒருவர் தாங்கள் ஏமாற்றுவது மற்றவர்களுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் செய்யும் தவறுகள் எப்படியாவது வெளிவந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

உணவு தானிய உற்பத்தி

❖ தமிழகத்திலே வறட்சி நிலவினாலும் கூட, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவு இன்றைக்கு இந்தியாவிலேயே நான்கு ஆண்டுகள் உணவுதானிய உற்பத்தியிலேயே அதிக உற்பத்தி செய்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை பெற்ற அரசு அம்மாவினுடைய அரசு.

எம்.ஜி.ஆர் என்ற பெயர்

❖ எம்.ஜி.ஆர் என்ற பெயர் – எங்களுக்கு மந்திரம். அவருடைய பெயரைச் சொல்லியே நாங்கள் எதிரிகளை புறமுதுகிட்டு ஓடச்செய்வோம். அவருடைய பெயருக்கு அத்தனை மகிமை இருக்கிறது.

காலம் என்கிற கழுகு

❖ தங்கள் நட்பு தங்களுக்கே ஆபத்தானது என்பதை காலம் அவர்களுக்கு உணரவைக்கும். அவர்களை உண்மையான தொண்டர்கள் உற்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள், காலம் என்கிற கழுகு அவர்களை அழித்துவிடும்.

உழைப்பு

❖ நாங்கள் அத்தனைபேரும் உழைத்தவர்கள், உழைத்து முன்னுக்கு வந்தவர்கள். மேடையிலே வீற்றிருப்பவர்களும் சரி, மேடைக்கு முன்னாள் வீற்றிருப்பவர்களும் சரி, வருகை தந்திருக்கின்ற கழகத்தின் தொண்டர்களும், நிருவாகிகளும் உழைத்துதான் அந்த பதவிக்கு வந்திருக்கின்றோம்.

தடுப்பணையின் அவசியம்

❖ தடுப்பணை கட்டுவதன் மூலமாக, பெய்கின்ற மழைநீர் அங்கேயே சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்கின்றது. விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைக்கிறது, குடிப்பதற்குத் தேவையான நீர் கிடைக்கின்றது.

இணக்கமான உணர்வு

❖ மத்தியில் ஒரு இணக்கமான உறவு இருக்கும்போது, பல்வேறு கட்டங்களில் தேவையான நிதிகளை பெறுவதற்கு ஒரு சுமூகமான உறவை வைத்திருக்கின்றோம். ஆகவே, மத்திய அரசோடு ஒத்துப்போனால் தான் திட்டங்களை பெறமுடியும், அப்போது தான் தமிழகம் வளர்ச்சி பெறும்.

வீடு – நாடு

❖ “வீடு இருந்தால்தான் ஓடு மாற்றலாம் என்பதைப்போல நாங்கள் நாடு நன்றாக இருக்கவேண்டும் என்று நினைக்கின்றோம்.

இருளை நீக்கும் ஒளியாக பெண்கள்

❖ தங்கள் வாழ்வில் எதிர்வரும் இடர்களை அஞ்சாமல் உறுதியுடன் எதிர்கொண்டு, அவற்றை வெற்றிப் படிகளாக்கி, இருளை நீக்கும் ஒளிவிளக்காக பெண்கள் உலகில் உயர்ந்து விளங்கிட வேண்டும்.

முதல் கையெழுத்து

❖ நான் முதன்முதலில் கையெழுத்திட்ட அந்த ஐந்து திட்டங்களில் முதல் திட்டமான "அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்" தமிழ்நாட்டின் தலைமகளாகவும், தமிழ்த்தாயின் தவப்புதல்வியாகவும் திகழ்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திட்டம். உழைக்கும் மகளிர் சுதந்திரமாகவும், விரைவாகவும் தங்கள் பணியிடங்களுக்கு சென்று வரவும், தங்கள் குழந்தைகளை பள்ளிக் கூடத்திற்கு அழைத்துச் செல்லவும், யாரையும் சார்ந்து இருக்காமல் தங்களது அனைத்துப் பணிகளையும் குறித்த நேரத்தில் செய்ய இயலும்.

கடுமையான நடவடிக்கை

❖ தேசிய பாதுகாப்புக்கும், உள்நாட்டு பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயல்படும் நபர்கள் மற்றும் அமைப்புகள் மீது, தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ், கடுமையான நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்க வேண்டும்.

முறையான நடவடிக்கை

- சாலை விபத்துகள் தனி மனித வாழ்வில் பெரும் துயரத்தையும், பேரிழப்பையும் ஏற்படுத்துகின்றன. அவற்றைத் தடுக்க, அடிக்கடி விபத்து நடக்கும் இடங்களை இனம் கண்டறிந்து, அவ்விடங்களில் சாலைகளை சீரமைத்தோ, தடுப்பு வேலிகள் அமைத்தோ, வாகனத்தின் வேகத்தைக் குறைக்கத் தேவையான எச்சரிக்கை பலகைகளை அமைத்தோ, மேலும் ஒரு விபத்து கூட அவ்விடத்தில் ஏற்படாமல் தடுக்க, முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

சிறைச்சாலை

- குற்றம் செய்து தண்டனை பெற்றவர்கள், மீண்டும் குற்றம் செய்யாத அளவிற்கு சீர்திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே உருவாக்கப்பட்ட இடம்தான் சிறைச்சாலை. ஆனால், சிறைச்சாலையினுள் மீண்டும் குற்றம் செய்ய தூண்டும் நடவடிக்கைகள் இருந்தால், சமூகத்தில் குற்ற நிகழ்வுகள் அதிகரிக்கும் அபாயம் ஏற்படும்.

அட்சயப்பாத்திரம்

- அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் இயங்கி வரும் “அம்மா உணவகங்கள்” ஏழை, எளிய மக்களின் அட்சயப் பாத்திரமாக விளங்குகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

- மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு பொது மருத்துவரைப் போன்று அனைத்து விதமான மக்களின் தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் நல்ல தீர்வை வழங்குவது மிக அவசியமாகும்.

மொழி

❖ மொழி என்பது ஒரு நாட்டின் பண்பாடும், அடையாளமும் ஆகும். இந்த உலகத் தாய்மொழி நாளில், தமிழர் பண்பாட்டையும், அடையாளத்தையும் காத்து வளர்த்திட, நம் தாய்மொழியாம் தமிழ் மொழியை நாம் அனைவரும் போற்றி வளர்த்திட வேண்டும்.

இயற்கை மருத்துவம்

❖ இயற்கை மருத்துவம் உண்மையிலேயே சிறந்ததொரு மருத்துவம் ஆகும். நாம் ஒவ்வொருவரும் இயற்கை மருத்துவத்திற்கு செல்லவேண்டும், யோகா பயிற்சி செய்யவேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகின்றது. இயற்கையாக விளையக்கூடிய பொருட்கள், எள், கடலை, இயற்கையாகக் கிடைக்கக் கூடிய கனிகள், நெல்லிச் சாறு, கோதுமை பயிர் சாறு போன்றவை எல்லாம் உடல் ஆரோக்கியத்திற்கு, உடலில் இருக்கின்ற நோயை குறைப்பதற்காக இயற்கையாக தயாரிக்கப்பட்டவை.

தமிழகத்தின் உரிமை

❖ தமிழ்நாட்டின் உரிமைகளையும், வேளாண் பெருமக்களின் நலன்களையும் கண்ணின் மணிபோல எப்போதும் காக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு இறுதி தீர்ப்பை முழுமையாக ஆராய்ந்து சாதகமான அம்சங்களை விரைந்து முன்னெடுத்துச் செல்லவும், நமக்குரிய காவேரி நதி நீரினை முழுமையாக பெறவும், சட்ட வல்லுநர்களின் ஆலோசனையைப் பெற்று, தேவையான தொடர் நடவடிக்கைகளை விரைவாகவும், உறுதியாகவும் எடுக்கும்.

விஞ்ஞானக் கல்வி

- ❖ இந்தியாவிலேயே தமிழக மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கியது அம்மாவினுடைய அரசுதான். இந்தியாவிலேயே விஞ்ஞான கல்வி படித்த மாணவ, மாணவியர் தமிழ்நாட்டில் தான் இருப்பார்கள். இன்றைக்கு வல்லரசு நாட்டில் கூட விலையில்லா மடிக்கணினிகள் வழங்குவதில்லை

உயிர்கொடுக்கும் அரசாணை

- ❖ "நான் உத்தரவிட்ட கோப்புகள் ஒன்றும் வெறும் காகிதங்கள் அல்ல. கோப்புகள் ஒவ்வொன்றும் பலருடைய வாழ்க்கையில் விளக்கேற்றும்; பல திட்டங்களுக்கு உயிர் கொடுக்கும் அரசு ஆணைகள்."

காவலர்களின் கடமை உணர்வு

- ❖ பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழத்தகுந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்றால், காவலர்களாகிய உங்களின் கடமை உணர்வுதான் அதற்குக் காரணம். உலகமயமாக்கல், தொழில்நுட்ப புரட்சி மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சி போன்றவை காரணமாக காவல் துறையினர் பல்வேறு சவால்களை அவர்களது அன்றாடப் பணிகளின் போது எதிர்கொண்டு வருகின்றனர்.

காவல்துறையினருக்கு ஒத்துழைப்பு

- ❖ பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, அல்லும்–பகலும், தங்கள் குடும்பங்களைக்கூட கவனிக்க நேரமின்றி, சமுதாயக் கட்டமைப்பை பாதுகாக்க கடமையாற்றி வரும் காவல் துறையினரின் நற்பணிகளை பொதுமக்கள் பாராட்டி காவலர்கள் மேலும் சிறப்பாக செயல்படும் விதத்தில், அவர்களுக்கு தேவையான ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

இந்தியாவில் பாதுகாப்பான நகரம்

❖ இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான முதன்மை பெருநகரமாக சென்னையும், முதன்மை மாநகரமாக கோவையும் திகழ்வதாக தேசிய குற்ற ஆவண காப்பகத்தால் பட்டியலிடப்பட்டுள்ளது.

காவேரிப் பிரச்சினை

❖ காவேரி நதிநீர்ப் பிரச்சினை, காவேரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதார பிரச்சினையாக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது.

கைவினைஞர்கள்

❖ கல்லிலே கலை வண்ணம் காண்பதும், தான் காணும் பொருட்கள் அனைத்திலும் பல கலை வண்ணங்களை உருவாக்கும் எண்ணங்களைக் கொண்டவர்களும்தான் கைவினைஞர்கள்.

உள்ளாட்சி அமைப்பின் கடமை

❖ நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும்.

ஊர் வளம் – நீர் வளம்

❖ ‘நீர் என்பது உயிருக்கு நேர்’ என்று நாம் கருதி ஒவ்வொரு துளிநீரையும் தங்கத்திற்கு மேலாக சேமிக்க பழக வேண்டும். “அனைத்து வளங்களுக்கும் தண்ணீர் வளம்தான் தாய்” என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். “ஊர் வளம் பெற, நீர் வளம் காப்போம்”

விலையில்லா அரிசி

❖ விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்கின்ற காரணத்தினாலே, அதிக அளவு உற்பத்தியை தமிழகத்திலே காண முடிகின்றது, அதேபோல, விலையில்லா அரிசி கொடுக்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான்.

மின்சாரம்

❖ வேளாண்மைக்கு நீர், உடலுக்கு உயிர் எப்படியோ, அதுபோல தொழிலுக்கு உயிராய் இருப்பது மின்சாரம். வேளாண்மைக்கு உயிராய் இருப்பது நீர்.

சோதனைகளை வெற்றிபெறுவோம்

❖ எவ்வளவு சோதனைகள் வந்தாலும், அந்த சோதனைகளையெல்லாம் மக்கள் துணைகொண்டு நாங்கள் வெற்றிபெறுவோம். ஏனென்றால், மக்களுக்கு தேவையான திட்டங்களை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது, எதிலும் சோடை போகவில்லை.

ஒழுங்கு ஒற்றுமை

❖ ஒரு இயக்கம் நன்றாக பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், நாட்டில் உள்ள அனைவருக்கும் ஒழுங்கும், ஒற்றுமையும் அவசியம்.

செல்வந்தன்

❖ நோயில்லாத வாழ்வைப் பெறுபவனே மிகப்பெரிய செல்வந்தன் என்பதில் சந்தேகமில்லை. மனித குலத்தில் இறைவனுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கக்கூடியவர்கள் மருத்துவர்கள்.

குழந்தைகளின் உழைப்பு

❖ “குழந்தைகள் உழைப்பு நாட்டிற்கு சிறுமை” என்பதை உணர்ந்து, அனைத்து பெற்றோர்களும் தங்களின் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி, அவர்களுக்கு அழிவில்லாத கல்விச் செல்வம் கிடைக்கச் செய்ய வேண்டும்.

இயற்கை வளம்

❖ “நம் நாட்டிற்கு அழகையும், அழகுடன் சேர்த்து செல்வத்தையும் கொடுக்கின்ற இயற்கை வளங்களைக் காப்பது என்பது இந்நாட்டில் வசிக்கின்ற ஒவ்வொரு தனிமனிதனின் கடமையாகும்.”

விதிக்கு பதில் நிதி

❖ திட்டத்தின் பயன்களைக் குறைக்கும் வகையில் விதிகளை மாற்றுவதற்கு பதில், நிதி ஒதுக்கீட்டை மேலும் அதிகரிக்க வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம்

❖ நீங்கள் என்ன பேசினாலும், மக்களை ஏமாற்ற முடியாது. தகவல் உரிமைச் சட்டம் வந்துவிட்டது. ஆகவே, நீங்கள் பேசினாலும், பேசாவிட்டாலும், மக்கள் தகவல் உரிமைச் சட்டத்தின் மூலமாக தகவல் பெற்று உண்மையை ஏற்கெனவே தெரிந்திருக்கின்றார்கள். அந்த உரிமை இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக கொடுக்கப்பட்டு இருக்கிறது.

மனிதனின் மகிழ்ச்சி

❖ இயற்கையை ரசிக்காதவர்கள் எவரும் இருக்க முடியாது. ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சி தேவை, அந்த மகிழ்ச்சி எங்கே கிடைக்கும். என்று சொன்னால், இயற்கையில் தான் கிடைக்கும்.

மின்சிக்கனம்

- சமூக அக்கறையோடு மின்சாரத்தை சிக்கனமாக செலவு செய்யுங்கள். நாம் சேமிக்கும் ஒவ்வொரு யூனிட் மின்சாரமும், தமிழ்நாடு மட்டுமல்லாமல், நம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் முக்கியம்.

கனிம வளம் – இயற்கை வளம்

- ஒரு நாடு செல்வ செழிப்போடு இருக்கிறது என்பதை அந்த நாட்டின் பூமிக்கு அடியில் இருக்கின்ற கனிம வளங்களைக் கொண்டு தீர்மானிக்கிறோம். ஒரு நாடு அழகாக இருக்கிறது என்பதை அந்த நாட்டின் பூமிக்கு மேலே இருக்கின்ற இயற்கை வளங்களைக் கொண்டுதான் தீர்மானிக்கிறோம்.

புதையல்

- கட்சிக்கும், ஆட்சிக்கும் உழைப்பவர்கள் பக்கம்தான் மக்கள் நிற்பார்கள். அவர்களின் ஆதரவும் கிடைக்கும். புதையல் போன்ற மக்கள் ஆதரவு, உழைக்காதவர்களுக்கு என்றும் கிடைக்காது.

கல்வியில் புரட்சி

- கல்வியிலே ஒரு புரட்சி. எல்லா துறைகளைக் காட்டிலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்கின்ற துறை கல்வித்துறை. ஒரு மாநிலத்திலே கல்வி வளர்ந்தால் அனைத்தும் வளரும். பொருளாதாரம் வளரும். எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டுமென்றால் கல்வி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

தேசத்தின் வளர்ச்சி

❖ “உடம்பின் நலனை நாடியைப் பார்த்துச் சொல்வதைப் போல, ஒரு தேசத்தின் வளர்ச்சியை அதன் சாலையைப் பார்த்துதான் மதிப்பிட முடியும்”.

சாலைகளின் பங்கு

❖ மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பிற்கும் தொழில் வளர்ச்சிக்கும் தரமான சாலைகள் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்த வகையில், இந்த பசுமைவழி விரைவுச் சாலையினால் தமிழ்நாட்டில் தொழில் முன்னேற்றம் அடைவது மட்டுமின்றி, வேலைவாய்ப்பு, தனிநபர் வருமானம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) உயரும். தொழில் வளர்ச்சிக்கு மிகவும் பயன்படும் கனரக வாகன போக்குவரத்து குறைந்த நேரத்தில் குறிப்பிட்ட இடங்களுக்கு சென்றடையும். மேலும் கனரக வாகன நடை எண்ணிக்கை அதிகரிக்கும். இது தொழில் வளர்ச்சிக்கு மிகப் பயனுள்ளதாக அமையும்.

முதுமை –கடமை

❖ முதுமை என்பது தவிர்க்க இயலாதது. காலத்தின் நெடிய பாதையில் நாம் அனைவரும் ஒவ்வொரு நொடியும் முதுமையின் திசையை நோக்கியே நகர்ந்து கொண்டு இருக்கின்றோம். முதுமையை மதித்தலே ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளம். நம்மை சுமந்தவர்களை நாம் சுமப்பது என்பது நமது கடமையாகும்.

ரம்ஜான்

❖ ரம்ஜான் பெருநாளில் உலகில் அமைதி நிலவட்டும், இன்பம் பெருகட்டும், அன்பும் சகோதரத்துவமும் தழைக்கட்டும்.

மணல் அத்தியாவசியமானது

❖ மணல் என்பது முக்கியமான அத்தியாவசியமான ஒரு பொருள். கட்டுமான தொழிலுக்கு நிச்சயம் அது தேவைப்படுகிறது. ஏழை, எளிய மக்களுக்கு பசுமை வீடுகள், அதுமட்டுமல்லாமல், அரசால் ஏழை மக்களுக்கு கட்டித்தரப்படுகின்ற வீடுகள், இதற்கெல்லாம் மணல் மிக மிக முக்கியம். ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான், ஆற்றிலும், ஓடையிலும் அரசு விதிகளுக்கு உட்பட்டு, அந்த மணலை அள்ளி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நீர் இருப்பு இருந்தால்தான்...

❖ தண்ணீர் இருப்பு இருந்தால் உரிய காலத்திலே திறக்கப்படும். தண்ணீர் இருப்பு இல்லை என்றால், உங்களுடைய ஆட்சியிலும் சரி, எங்களுடைய ஆட்சியிலும் சரி, நீர் இருப்பு இருந்தால் தான் தண்ணீர் திறக்க முடியும்.

சுதந்திரத் திருநாள்

❖ நாட்டின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தங்களின் சொந்த நலன்களை பற்றி சிந்திக்காமல், நாட்டு விடுதலைக்காகவே தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்த சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவு கூர்ந்து போற்றும் பொன்னாள் சுதந்திர திருநாள்.

மதச் சார்பின்மை

❖ “தமிழ்நாட்டில் சாதி, மதம், மொழி, இனம் மறந்து அனைவரும் சகோதர, சகோதரிகளாக ஒரு குடும்பம்போல் வாழ்ந்து வருகின்றனர். மதச்சார்பின்மையை பின்பற்றும் ஒரு உன்னதமான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

விவசாயிகளுக்கு கட்டணமின்றி மண்

❖ ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகளில் படிந்துள்ள களிமண், வண்டல், சவுடு மற்றும் சரளை மண்ணை, மண்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு கட்டணமின்றி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழில்செய்ய முன்வரவேண்டும்

❖ அரசு கொண்டு வரும் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு, மாநிலம் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய வேண்டுமெனில், நம் நாட்டு தொழில் முனைவோர்களும், பன்னாட்டு நிறுவனங்களும் மாநிலத்தில் முதலீடு செய்து தொழில் துவங்க முன்வரவேண்டும்.

சரியாகப் பயன்படுத்துகிறோமா!

❖ பேச்சுரிமை, கருத்துரிமை மற்றும் பல்வேறு உரிமைகளுக்காக போராட்டத்தில் ஈடுபடுவது போன்ற ஜனநாயக உரிமைகளை, அரசியலமைப்புச் சட்டம் நமக்கு அளித்துள்ள போதும், அவற்றை நாம் சரியாக பயன்படுத்துகிறோமா என்பது பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டலாம்

❖ அரசு எடுத்த முடிவுகளில் அல்லது செயல்பாட்டில் ஏதேனும் குறைகள் இருப்பதாக அறிந்தால், அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் பட்சத்தில், மாண்புமிகு அம்மாவின் அரசு அதை கவனத்துடன் பரிசீலித்து அவற்றை களைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குறியீடு

❖ பொதுவாக, குற்ற நிகழ்வுகளை ஒப்பிடும்போது, குற்ற விகிதம் என்ற எண்ணிக்கை பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்பதன் குறியீடு ஆகும்.

கடமையை செய்யும் காவல் துறையினர்

❖ நமது காவல் துறையினர், மாநிலத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடும் போக்கிரிகள், கொள்ளையர்கள், வழிப்பறி செய்வோர், கூலிப்படையினர், ஆட்கடத்துவோர், போதைப்பொருட்கள் கடத்துவோர், சமுதாயக் குற்றங்களில் ஈடுபடுவோர் போற்றோர்மீது கடும் நடவடிக்கைகள் எடுத்து சட்டம் ஒழுங்கை சீரிய முறையில் பராமரித்து வருவதுடன் மதம் மற்றும் வகுப்பு பூசல் ஏதுமின்றி தமிழ்நாட்டிட அமைதிப் பூங்காவாக பேணிக்காத்து வருகின்றனர்.

மூளைச் சலவை

❖ ஐ.எஸ்.ஐ.எஸ், இயக்கத்தினரின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்து வருவதோடு, அவ்வியக்கத்தினர் மாநிலத்திலுள்ள குறிப்பிட்ட மதம் சார்ந்த இளைஞர்களை மூளைச் சலவை செய்து தங்கள் வசம் ஈர்க்காமல் தடுத்து வருகின்றனர்.

உயிரிழப்பு குறைவு

❖ ஒவ்வொரு வருடமும் விபத்து வழக்குகளும், உயிரிழப்புகளும் அதிகரித்து வந்த நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக விபத்துகளும், உயிரிழப்புகளும் குறைந்து வருகிறது என்பது முன்பு எப்போதும் இல்லாத நிகழ்வு ஆகும்.

சமூக நீதி

- ❖ தமிழ் சமுதாயத்திற்கு சமூக நீதியை காத்து நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்கித் தரமுடியும். ‘‘உங்களால் முடியாது’’ என்ற விஷயங்கள் எல்லாம், மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த எங்களால் எப்போதும் முடியும், முடியும்.

வாழ்க்கைக் கல்வி

- ❖ ஏட்டுக்கல்வி மட்டும் இல்லாமல், சிறந்த திறன் கொண்ட வாழ்க்கைக் கல்வி தான் ஒரு மாணவனை சிறந்த மனிதனாக உருவாக்கும். தேர்வுக்காக படிக்காமல் வாழ்வுக்காக படிக்கும் கல்விதான் இந்த காலகட்டத்திற்கு மிகவும் தேவை.

மலர்ச்சி – எழுச்சி

- ❖ மாற்றம் என்பது மானிடத் தத்துவம் என்பது பழமொழி. ‘‘மாற்றம் என்பது மாணவர் தத்துவம்’’ என்பதுதான் புதிய மொழி. ஒரு நாட்டின் மலர்ச்சியும் எழுச்சியும் – ஒவ்வொரு மாணவனிடமிருந்ததான் தொடங்குகிறது.

ஆசிரியர் சமுதாயம்

- ❖ நமது தாய்த் திருநாட்டின் வருங்கால நம்பிக்கையாகத் திகழும் மாணவ செல்வங்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி, அவர்தம் எதிர்கால வாழ்க்கையை செம்மைப்படுத்தி சிறந்த மனிதர்களாக்கும் பெருமை ஆசிரியர் சமுதாயத்தையே சார்ந்ததாகும்.

கல்வி

- கல்வி என்பது நெருப்பால் வேகாது; கள்வர்களால் கொள்ளையடிக்க முடியாது; கொடுக்க கொடுக்கப் பெருகுமே தவிர குறையாது.

ஆசிரியரின் கடமை

- "ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடம் நடத்தும் போதே, இடையில் வாழ்க்கையில் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள், அதனை தீர்க்க அவர்கள் பயன்படுத்த வேண்டிய நெறிகள், தேசப் பற்று, நேர்மை ஆகியவற்றைப் பற்றியும் எடுத்துரைக்க வேண்டும்."

வன்முறை செயலை தவிர்க்க வேண்டும்

- மாணவர்கள் படிக்கும்போது அவர்கள் கவனம் முழுவதும் படிப்பில்தான் இருக்க வேண்டும். ஆனால் சிலர் புத்தகம் தூக்கும் கையில் ஆயுதங்களை தூக்கிக் கொண்டு செல்வது மிகவும் வருத்தமாக உள்ளது. வன்முறையில் ஈடுபடும் செயலை மாணவர்கள் முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

கட்டாயப் படுத்தக் கூடாது

- இந்த படிப்புதான் படிக்க வேண்டும் என்று அவர்களை கட்டாயப்படுத்தக் கூடாது. ஆர்வமாகப் படிக்க விரும்பும் படிப்பில் அடைகிற வெற்றியை ஆர்வமில்லாத படிப்பில் அடைய முடியாது. அவர்கள் விரும்பும் படிப்பை படிக்க அனுமதித்தால் அனைத்து மாணவர்களின் வெற்றி உறுதி.

நல்ல எதிர்காலம்

- படிக்கும் எல்லா துறைகளிலும் வாய்ப்புகள் நிறைய உள்ளன. எனவே, மாணவர்கள் படிக்கும் படிப்புகள் அனைத்திற்குமே நல்ல எதிர்காலம் உள்ளது.

மனிதனை மனிதனாக மாற்றுவது

❖ காவியங்கள் ஒருவனை உற்சாகம் உள்ளவனாக மாற்றுகிறது! கணக்குகள் ஒருவனை நுண்மையானவனாக மாற்றுகிறது! தத்துவ ஞானம் ஒருவனை ஆழ்ந்த பொருள் உள்ளவனாய் மாற்றுகிறது! அறிவியல் அறிவு ஒருவனை விஞ்ஞானியாக மாற்றுகிறது! நீதி நூல்கள் ஒருவனை ஒழுக்கமுள்ளவனாக மாற்றுகிறது! தர்க்க நூல்கள் ஒருவனை வாதம் செய்வதில் வல்லவனாக மாற்றுகிறது! ஆனால் தன்னைத் தான் அறியும் நிலையே ஒருவனை மனிதனாக மாற்றுகிறது!

கவர்ச்சி திட்டங்கள் அல்ல

❖ அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த திட்டங்கள் ஒவ்வொன்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் வெவ்வேறு நிலையில் உள்ள மக்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்கள் யாவும் தகுதிவாய்ந்த மக்களை சென்றடையுமாறு உள்ளன. எனவே, அத்தகைய திட்டங்களை கவர்ச்சித் திட்டங்கள் என்று குறிப்பிட இயலாது.

கருவறை – வகுப்பறை

❖ வாழ்வில் இரண்டு அதி முக்கிய அறைகள் உண்டு. ஒன்று, கருவறை– அம்மாவுடையது. மற்றொன்று, வகுப்பறை – ஆசிரியருடையது. அம்மா, வாழ்க்கையை தந்து உலகத்தை அறிமுகப்படுத்துகிறார். ஆசிரியர், அறிவை தந்து வாழ்க்கையை அறிமுகப்படுத்துகிறார்.

சுடர்விடும் தீபம்

❖ ஆசிரியர்கள் சமூக மேம்பாட்டின் சான்றோர்கள்; அறிவொளி ஏற்றும் தீபங்கள்; சுடர் விடும் தீபமொன்றில் இருந்துதான் மற்றொரு விளக்கை ஏற்ற முடியும்.

உண்மையான ஆசிரியர்கள்

❖ ஆசிரியர்கள் தியாக மனப்பான்மை கொண்டவராக இருந்தால் மட்டும் போதாது, கற்பிக்கும் தொழிலில் பேரார்வம் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அவர்கள் தான் உண்மையான ஆசிரியர்கள்.

கனவு காண வேண்டும்

❖ வசதியில்லாதவன் அவன் வரம்புக்குள் தான் கனவு காண வேண்டும் என்ற வரையறைகளை உடைத்தெறிந்து, அவர்கள் வானளாவிய கனவு கண்டு அதனை நனவாக்க உழைத்து, சாதனை படைத்து புகழ்பெறவேண்டும்

கற்றவன் முழு மனிதன்

❖ ஒருவன், மாதாவையும், பிதாவையும், குருவையும் பின்பற்றி வாழ்ந்தால், அவனுக்கு இறைவன் தேடி வந்து அருள் புரிவார். அவன் இறைவனை தேடிச்செல்ல வேண்டியதில்லை. கற்றவன்தான் முழு மனிதனாக மதிக்கப்படுகிறான்.

தாய் – ஆசிரியர்

❖ ஒரு தாய்க்கு உள்ள பொறுப்பும், கடமையும், தியாக உணர்வும், சகிப்புத்தன்மையும் நிச்சயமாக ஆசிரியர்களுக்கும் அவசியம் இருக்க வேண்டும்.

நமது வாழ்க்கை

- “சமையல் மோசமானால் நாம் இழப்பது ஒரு நாள். அறுவடை மோசமானால் நாம் இழப்பது ஓராண்டு. ஆனால் கல்வி மோசமானால் நாம் இழப்பதோ நமது வாழ்க்கை” என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அனைவருக்கும் உரிமை

- ஜனநாயக நாட்டிலே நம்முடைய அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. அதன் அடிப்படையில், நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளை, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கவனமாக பரிசீலித்து அதை நிறைவேற்றித் தருவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேகதாது

- காவிரியின் குறுக்கே மேகதாதுவில் புதிய நீர்த்தேக்கத்தை கருநாடக அரசு கட்ட திட்டமிட்டிருப்பது, காவேரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பை அப்பட்டமாக மீறுவதாகும். இந்த நீர்த்தேக்கம் காவேரியின் இயற்கையான நீர் ஒழுங்கை பாதிக்கும். கூட்டாட்சி அமைப்பின்படி, ஆறு சார்ந்து மேல் பகுதியில் இருக்கும் எந்த ஒரு மாநிலமும் கீழ் பகுதியில் உள்ள மாநிலங்களின் அனுமதியின்றி தன்னிச்சையாக மாநிலங்களுக்கு இடையிலான ஒரு ஆற்றின் இயற்கையான ஒழுங்கை தடுக்கக்கூடாது.

பிளாஸ்டிக் தடுப்பு

❖ பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு நாம் உள்ளாகின்றோம். தூய்மையான தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், ஒருமுறை பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும், அதற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பை நல்க வேண்டும். தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக மாற்றுப் பொருட்களை பொதுமக்கள் பயன்படுத்துவதன் மூலம் சுகாதாரமான வாழ்க்கையை நாம் அடைய முடியும்.

படப்பிடிப்புத் தளங்கள்

❖ அதிக அளவில் படப்பிடிப்பு தளங்கள் உருவாக்கப்படுவதன் மூலம் தமிழ் படத் தயாரிப்பாளர்கள் வெளியிடங்களுக்குச் செல்லாமல் உள்ளூரிலேயே படப்பிடிப்பு நடத்த வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் அவர்கள் தயாரிக்கும் படங்களுக்கான செலவுகள் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது.

குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி

❖ ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கடைக்கோடியில் இருக்கின்ற, கிராமத்திலே வாழ்கின்ற குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர்களுக்கு எல்லாம் குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி கிடைக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான், அரசாங்கமே இன்றைக்கு கல்லூரியை திறந்து, அவர்களுடைய வாழ்க்கையை மேம்பாடு செய்ய வழிவகை செய்திருக்கிறது.

விளையாட்டு

- விளையாட்டுகள் மூலம் தோழமை, ஒற்றுமை, மற்றும் ஒழுக்கம் ஆகியவை வளர்வதுடன், தலைமை பண்பும், இலக்கு நோக்கிய பயணமும் ஏற்பட வழிவகை ஏற்படுகிறது. ஒவ்வொருவரிடமும் உள்ள திறமைகளை கண்டறிந்து, அவர்களிடம் உள்ள திறமையை வளர்ப்பதற்கான உரிய பயிற்சிகளை வழங்குவதே அரசின் கடமையாகும்.

விளையாட்டு – இளைஞர் நலன்

- இளைஞர்கள் முதலில் இலக்கை தெளிவாக நிர்ணயித்துக்கொண்டு, வெற்றிபெறும்வரை அதனை நோக்கி பயணிக்க வேண்டும். விளையாட்டு என்றால் அது இளைஞர் நலனையே சார்ந்திருக்கும். விளையாட்டினால் இளைஞர்கள் நலன் பெறலாம். இளைஞர்களினால் விளையாட்டு மேம்பாடு அடையும். விளையாட்டும், இளைஞர் நலனும் ஒன்றுக்கு ஒன்று பின்னிப் பிணைந்தவை.

இளைஞர்களை தயார்படுத்துங்கள்

- அனைத்து துறைகளிலும் நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல அறிவார்ந்த இளைஞர்களை தயார்படுத்துவதில் தமிழ்நாடு தனது உரிய பங்கினை அளிக்கும்

இடைநிற்றலின்றி கல்வி கற்றல்

- அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குழந்தைகளும் இடைநிற்றல் இன்றி கல்வி கற்று, சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும்

சிறந்த மகிழ்ச்சி

❖ இளைஞர் பருவத்திலே விளையாடுவது அவசியம். விளையாட்டில் கலந்துகொண்டு விளையாடுகின்றபொழுது கிடைக்கின்ற மகிழ்ச்சி எந்த விதத்திலும் குறைவானது அல்ல. மற்ற பதவிகளில் இருக்கின்ற மகிழ்ச்சியைவிட விளையாடுகின்றபொழுது கிடைக்கின்ற மகிழ்ச்சிதான் சிறந்த மகிழ்ச்சி.

இருதய அறுவை சிகிச்சை

❖ நம்முடைய ஏழை, எளிய தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் ஏதாவது இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று சொன்னால், சிகிச்சை பெறக்கூடிய பெற்ற தாய்க்குத்தான் அந்தக் குழந்தையின் அருமை தெரியும். ‘‘எந்தக் காலத்திலும் மக்களுக்கு துன்பம் ஏற்பட்டால் உடனடியாக அந்தத் துன்பத்திலிருந்து விடுவிக்கக்கூடிய ஒரே அரசு. அது அம்மாவுடைய அரசாகத்தான் இருக்கும்.

விபத்தை குறைத்து உயிர்களைக் காக்க

❖ மாநகரத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதால், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடனும், சாலை விபத்துக்களைக் குறைத்து விலை மதிக்கமுடியாத உயிர்களை காப்பாற்றும் நோக்கத்துடனும் இந்த உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

விலைவாசி ஏற்றமில்லாமல்

❖ அம்மா இருக்கின்ற பொழுது எப்படி விலைவாசியை கட்டுப்பாட்டில் வைத்து இருந்தார்களோ, அதைப்போல அம்மாவினுடைய அரசும் விலைவாசி உயராமல் ஏழை, எளிய மக்களை பாதுகாத்து வருகிறது.

கஜா புயல்

❖ “எனது தலைமையிலான அரசின் இடைவிடாத முயற்சியால், “கஜா” புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள அனைத்து இடங்களிலும் விரைவில் மின் வசதி வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.”

மருத்துவ சேவை

❖ ஏழை,பணக்காரர் வித்தியாசம் பார்க்காமல் அனைவருக்கும் தரமான மருத்துவ சேவையை வழங்க வேண்டும் என்பதை கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

மெட்ரோ இரயில்

❖ பொது போக்குவரத்தின் பரிணாம வளர்ச்சி நம்மை பிரமிக்க வைக்கின்றது. கால்வலிக்க ஊர் ஊராக நடை பயணம்! குதிரைகளில் பயணம், சக்கரங்களைப் பயன்படுத்தி குதிரை வண்டி, மாட்டு வண்டிகளில் பயணம்! எரி பொருளைப் பயன்படுத்தி தரைவழிப் பயணம் என்று இருந்தது. பொது போக்குவரத்து முறையின் அதிநவீன வளர்ச்சிதான் மெட்ரோ இரயில் ஆகும்.

நமது கடமை

❖ “ஒவ்வொருவரும் பெரும் சாதனைகளுக்காகவே பிறந்திருக்கிறோம். அவற்றை நிகழ்த்திக் காட்டும் திறனும், வலிமையும் நம் ஒவ்வொருவரிடமும் இயற்கையாகவே அமைந்துள்ளன. அவற்றை உணர்ந்து செயல்படுவதே நமது கடமை”.

ஐ.நா சபை ஏட்டில் எம்.ஜி.ஆர்

❖ பிரதமர்களின் பெயர்களும், வெளியுறவுத்துறை அமைச்சர்களின் பெயர்களும் தான் ஐ.நா. சபை பதிவேட்டில் இடம் பெற்றிருந்தது. சத்துணவுத் திட்டத்தின் மூலமாக முதன்முதலில் புரட்சித்தலைவர் அவர்களின் பெயர் ஐ.நா. சபை ஏட்டில் பதிவானது.

நாகாக்க

❖ ஒரு நாக்கை வைத்து, நல்லது பேசுவதும், கெட்டது பேசுவதும், நம் கையில்தான் இருக்கிறது. எனவே, நம் நாக்கை என்றும் பேணிக்காத்து, நல்லவைகளையே பேசப் பழகிக் கொள்ள வேண்டும்.

பேச்சு வசீகரம் உழைப்பு

❖ மக்கள் உங்களிடம் வருவதற்குப்பதிலாக நீங்கள் சேவகனைப் போல மக்களிடம் செல்ல வேண்டும். பேரறிஞர் அண்ணாவின் பேச்சு! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் வசீகரம்! மாண்புமிகு அம்மாவின் உழைப்பு! இவைதான் கழகக் கொடியின் மூன்று வண்ணங்களாக நமக்குத் தெரிய வேண்டும்.

மக்கள் மனதில் நிரந்தரமாக வாழ்பவர்

❖ இரண்டு தலைவர்களுமே உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாதவர்கள். திறந்த இதயத்தோடு, மலர்ந்த முகத்தோடு, சுயநலம் சிறிதும் இல்லாமல் மக்களுக்காகவே உழைத்தார்கள், மக்களுக்காகவே வாழ்ந்து மறைந்தார்கள். அதனால்தான், மறைந்தும் மறையா வரம் பெற்று மக்கள் மனத்தில் நேற்றும், இன்றும், என்றும் நிரந்தரமாக வாழ்ந்து வருகிறார்கள்.

உழைக்கின்ற ஆட்சி

❖ இந்த ஆட்சி மக்களுடைய ஆட்சி, மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஆட்சி. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும், உயர வேண்டும் என்பதற்காக இரவு, பகல் பாராமல் உழைக்கின்ற ஆட்சி இந்த ஆட்சி, உங்கள் ஆட்சி, உங்களுடைய ஆட்சியை யாராலும் அசைக்க முடியாது.

தமிழகத்தின் தலைப்புச் செய்தி

❖ மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பல ஆண்டுகள் தமிழ்நாட்டில் தலைப்புச் செய்திகளாகவே வாழ்ந்த ஒரு மாபெரும் தலைவர். சிலர் வரலாறு படைப்பார்கள். சிலரில், சிலர்தான் வரலாறாக வாழ்வார்கள். ஆனால், புரட்சித்தலைவர் அவர்கள்தான் வரலாறாகவே இந்தப் பூமிக்கு இறைவனால் அனுப்பப்பட்ட மாமனிதர்.

இயற்கை

❖ தன்னைவிட சக்தி கொண்டவன் இந்த நாட்டில் யாரும் இல்லை. தன்னால் தான் நாட்டில் எல்லாமும் நடக்கிறது. அனைவரும் தனக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று கர்வமும், ஆணவமும் மிக்கவர்கள் இயற்கைக்கு முன்பு ஒன்றுமில்லாமல் ஆகிவிடுகிறார்கள்.

இணக்கமாக வாழ்தல்

❖ “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” என்பார்கள். ஒற்றுமையின் வலிமையை உணர்ந்தால்தான் தெரியும். யார் பெரியவர், யார் சிறியவர் என்ற பேதமில்லாமல், ஒருவரோடு ஒருவராக இணைந்து இணக்கமாக வாழ்வது என்பது நமக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்கும் நல்லது. நாம் அனைவரும் சேர்ந்தால்தான், தென்றலாக வீச முடியும்;

மக்கள் மனது

❖ ‘மக்களுக்கு எதையும் செய்யாமல் மக்கள் தலைவன் ஆகலாம்’ என்றால் அவர்களை மக்கள் ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

பொருளாதார மேம்பாடு அடைய உழைத்தவர்கள்

❖ கிராமம் செழிக்க வேண்டும். கிராமத்திலிருக்கின்ற ஏழை, எளிய உழைப்பாளி, விவசாயி, விவசாயத் தொழிலாளி முன்னுக்கு வரவேண்டும். சமூகப் பொருளாதாரம் மேம்பாடு அடையவேண்டுமென்று இரவு, பகல் பாராமல் இரண்டு பெரும் தலைவர்களும் உழைத்தார்கள்.

நிலைத்து நிற்பது

❖ ஒரு மனிதன் பிறக்கின்றான், வாழ்கின்றான், இறக்கின்றான், இடைப்பட்ட காலத்திலே என்ன சாதனை செய்கின்றான் என்பது தான் மக்கள் மனதிலே நிலைத்து நிற்கும்.

உலகம் ஏற்றுக்கொள்ளாது

❖ எட்டாத கனிக்கு, ஏப்பம் விடுபவர்கள் ஆசையை மட்டும் மனதில் வளர்த்துக் கொள்வதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. வானத்தை வில்லாக வளைப்பேன்; பூமியை பந்தாக உதைப்பேன்; கடலை ஒரே மூச்சில் குடிப்பேன் என்றெல்லாம் வாய் ஜம்பம் பேசிக்கொண்டிருப்பவர்களை இந்த உலகம் ஏற்றுக் கொள்ளாது.

நமக்கான படிக்கட்டு

❖ தொண்டு நோக்கம் என்பது தூய்மையானதாகவும், விவேகம் நிறைந்ததாகவும் இருந்து விட்டால், எதை நினைத்தும், யாரை நினைத்தும் அச்சப்பட அவசியமில்லை. நமக்கு தண்டனை என்று நினைத்து, பிறர் செய்யக்கூடிய தீங்குகளை கூட நமக்கான வாய்ப்புகளாக மாற்றி விட முடியும். நம்மை நோக்கி வீசப்படும் கற்களை கூட, நமக்கான படிக்கட்டுகளாக மாற்றிக் காட்ட முடியும்.

மனக்கோட்டை–மணல்கோட்டை

❖ அதை செய்வேன் நான் இதை செய்வேன். வானத்தை வில்லாக வளைப்பேன். கடல் அலையை நிறுத்துவேன். சந்திரனிலும் போய் ஆட்சி அமைப்பேன். என்றெல்லாம் பேசி, அதை மக்களும் நம்புவார்கள் என நினைக்கிறார்கள். உங்கள் மனக்கோட்டை, கடற்கறையில் கட்டப்படும் மணல்கோட்டை என்று மக்களுக்குத் தெரியும்.

அர்த்தமில்லாத கனவு ஆபத்து

❖ மக்கள் நலனில் அக்கறையில்லாமல், மக்களுக்காக உழைக்காமல், கண்களை மூடிக்கொண்டு கனவு காண்பதை நிறுத்துங்கள். உங்கள் அர்த்தமில்லாத கனவு, உங்களுக்கு ஆபத்தைத்தான் ஏற்படுத்தும்.

ஆட்சியாளர்களின் திறமை

❖ நியாயமான எதிர்ப்புகளை சரி செய்வதும், காழ்ப்புணர்ச்சியில் கிளம்பும் எதிர்ப்புகளை விட்டுத் தள்ளுவதும் தான் நல்ல ஆட்சியாளர்களின் திறமை. எங்களைப் பொறுத்தவரை நாங்கள் மக்கள் நலத் திட்டங்களுக்காக ஆட்சி நடத்துகின்றோம்.

தாய் வீடு

❖ நாங்கள் மக்கள் சேவையை மகேசன் சேவையாக கருதி மக்கள் தொண்டு ஆற்றுவதில் ஒரு காலமும் பின்வாங்க மாட்டோம். மக்கள் பலம் ஒன்றே எங்களுக்கு போதும். தவறானவர்களை பிடித்துக் கொண்டு தவறான திசைக்கு போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் நாங்கள் காப்பாற்றி தாய் வீட்டிற்கு கொண்டு வருவோம்.

இறைவனாலும் முடியாது

❖ சிலர் எவ்வளவு கொடுத்தாலும் திருப்தியடையாமல், அரசு பலன்களை அனுபவித்துக் கொண்டு அரசை குறை கூறுவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை இறைவனாலும் திருப்திப்படுத்த முடியாது.

பூவின் மதிப்பு

❖ மரத்தை விட்டு பூ செல்வதனால் மரத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை. ஒரு பூ சென்றால், இன்னொரு பூ துளிர்விடும். இது மாதிரி எவ்வளவு பூக்கள் மரத்திலிருந்து விழுந்தாலும், புதிய பூக்கள் துளிர்விட்டுக் கொண்டே இருக்கும். மரத்தில் இருக்கும் வரைக்கும் தான் பூவிற்கு மதிப்பு. மரத்தை விட்டு கீழே விழுந்துவிட்டால் அது குப்பைமேட்டிற்குத்தான் செல்லும்.

தவறான செயல்

❖ மக்களுக்கு ஒரு பிரச்சினையென்றால் அதை தீர்க்கும் கடமையும், பொறுப்பும் எதிர்கட்சிகளுக்கும் உண்டு. அந்தப் பிரச்சினைகளிலிருந்து மக்களை விடுவிக்க ஆட்சியாளர்களுக்கு கருத்துக்களைக் கூறலாம். அதை விட்டுவிட்டு, அவதூறுகளையும், வதந்திகளையும் அள்ளிவீசி மக்களை குழப்பத்திலும், பீதியிலும் ஆழ்த்துகிற செயல்களை செய்து கொண்டிருப்பது மிகவும் தவறான செயலாகும்.

மாய பிம்பம்

❖ எதிர்கட்சிகள் என்றால் ஆளுங்கட்சியின் ஒவ்வொரு அசைவுகளையும் அரசியல் ஆக்கி குறை கூறிக்கொண்டே இருக்கவேண்டும். அதுதான் எதிர்கட்சிகளின் இலக்கணம் என்ற மாய பிம்பத்தை உருவாக்கி விட்டார்கள். எதிர்கட்சிக்காரர்களின் கண்களுக்கு ஆளுங்கட்சியின் ஆக்கப்பூர்வமான திட்டங்களும், செயல்களும் கூட கெட்டதாகவே தெரிகிறது என்றால் குறைபாடு அவர்களின் கண்களில்தான் இருக்க வேண்டும்.

அஸ்திவாரம்

❖ ஒரு நல்ல தலைவனுக்கு அஸ்திவாரம் என்ன தெரியுமா? மக்கள் நம் பேரில் வைத்திருக்கின்ற மதிப்பும், நாம் அவர்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் தான்" – என்றார்கள்.

இறப்பில் கூட வெற்றிகண்டவர்

❖ ‘எதை கொண்டு வந்தோம், கொண்டு செல்வதற்கு’ என்ற கீதையின் வைர வரிகளுக்கு ஏற்றாற்போல்... தான் மறையும் போது தனது சொத்துக்கள், உடைமைகள் அனைத்தையும் மக்களுக்காகவும், வாய்பேசாத, காதுகேளாத, மாற்றுத்திறனாளிகளுக்காக வழங்கிவிட்டு, இறப்பைக்கூட வெற்றி கண்டு கோடிக்கணக்கான உள்ளங்களில் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

மக்கள் தீர்ப்பு

❖ தீர்ப்பு என்பது வாதத்தின் திறமையை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் மக்கள் தீர்ப்பு, உண்மையை அடிப்படையாகக் கொண்டது. இறுதியில் மக்கள் தீர்ப்புதான் வெல்லும்.

தர்மம் வெல்லும்

❖ மக்களை ஏமாற்றுவதற்காக வேஷம் போட்டு நடிப்பவர்களையும், அந்த நடிப்பின் மூலம் தற்காலிக வெற்றியடைந்தவர்களையும் மக்கள் நம்பவேண்டாம். விரைவிலேயே அவர்களுடைய வேஷம் கலையும், அப்போது அந்த ஏமாற்றுப் பேர் வழிகளுடைய உண்மை முகம் மக்களுக்குத் தெரியும். கடைசியில் தர்மம் தான் வெல்லும்.

❖ ❖ ❖

ஒரு விவசாயி எப்படி நிலத்தில் உழுது, நிலத்தைப் பண்படுத்தி, பயிர்கள் நடவு செய்து, விளைச்சலைப் பெறுகின்றானோ, அதேபோல் அனைத்துமட்ட தொண்டர்களோடு இணைந்து பணியாற்றி இந்த அரசுக்கு, ஆட்சிக்கு நற்பெயரை ஏற்படுத்துவோம்.

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை